தனி இதழ்
[illegible]
இலங்கையில் 10 சதம்.

மலர் 1] [இதழ் 128

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்.. அண்ணாதுரை

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF: THE D.P.F.

சென்னை : ஐப்பசி 26உ புதன் (11—11—53) வெளியீடு : ஐப்பசி 27உ வியாழன் (12—11—53)

'தூத்துக்குடி தி.மு.க.-வினர் மீது பழி!'

— (:) —

'நேரு இருக்கிறவரை அரசாங்கம் ஏதோ நடக்கும்......பிறகு?'

'இட்லரும், முசோலினியும் போலத்தான் இராஜகோபாலாச்சாரியாரும், அவரைச் சார்ந்தவர்களும் ஆவார்கள்'

— (:) —

'அதிகார ஆசைக்காக என்ன வேண்டுமானாலும் செய்வார் ஆச்சாரியார்'

"நியாயம் தெரியாமல் நடக்கிறார்! மோசமாகப் பேசுகிறார்!! செய்யக்கூடாத செயல்களை செய்கிறார்!!!"

— (:) —

"அன்று வரவேற்றேன்! அதற்காக இன்று வருந்துகிறேன்!"

தோழர் பி.டி.ராஜன் அவர்கள் ஆற்றிய விரிவுரையின் சுருக்கம்

சின்னமனூர், நவ. 10—

"தூத்துக்குடியில், அக்கிரகாரத்தில் நுழைந்து, திராவிட முன்னேற்றக் கழகத்தார் ஏதோ செய்து விட்டார்கள் என்று கூறினார்கள். இதை நான் விசாரித்துப் பார்த்ததில், இந்த மாதிரிச் சந்தர்ப்பங்களில், இதில் சம்பந்தப்படாத பொறுப்பற்ற காலிகள் ஏதாவது செய்துவிடுகிறார்கள். இதனால் கெட்ட பெயர் வந்துவிடுகிறது. என்பது தெரியவருகிறது."

"கருப்புக் கொடி காட்டினால் இப்படியா பேசுவது? நீங்கள் காட்டிய வழியைத்தானே அவர்கள் பின்பற்றுகிறார்கள்? யார் அயோக்கியத்தனம் செய்தாலும், கட்சி, சாதி, மத வேறுபாடின்றி நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்படி போலீசுக்குச் சொல்லத் தைரியம் இல்லையே!"

"நேரு இருக்கிறவரை இந்திய அரசாங்கம் ஏதோ நடக்கும்; நேரு காலத்திற்குப் பிறகு, என்ன ஆகும் என்று சொல்ல முடியாது"

"நியாயத்திற்குக் கட்டுப்பட்டு நடப்பார் என்றுதான் ஆச்சாரியாரைக் கூப்பிட்டோம்; ஆனால், அவர், அப்படி நடக்கவில்லை. ஆகையால், 'போய்விடுங்கள்' என்றால், வெள்ளையரை அழைக்கிறோம் என்று அர்த்தமாகுமா?"

"எவ்வளவோ பெரிய காந்தியடிகள் மறைந்த பிறகு இந்திய மக்கள் வாழாமல் போய்விட்டார்களா? அல்லது இந்திய அரசாங்கம் நடக்காமல் போய்விட்டதா? இப்படியிருக்க, 'நான் இல்லாவிட்டால் நடக்காது' என்று, ஆச்சாரியார் ஏன் சொல்ல வேண்டும்? அவர் நன்றாக ஆளட்டும்; ஆனால், ஆளத் தகுதியுள்ளவராக இருக்க வேண்டும். நாங்கள்தான் ஆளத் தகுதியுடையவர்கள் என்று சொன்ன ஹிட்லரும், முசோலினியும் இருந்த இடமே தெரியவில்லை அதைப் போலத்தான் இராசகோபாலாச்சாரியும், அவரைச் சார்ந்தவர்களும் ஆவார்கள்."

"மனிதனுக்கு யோக்கியதை பெரிதே தவிர, பதவி பெரிதல்ல. பதவி இல்லாமலே, அதிகாரம் இல்லாமலே மக்களின் ஆதரவைத் தேட வேண்டும். பதவிக்கும், அதிகாரத்திற்கும் ஆசையும், மோகமும் உள்ளவரை இந்த நாட்டுக்கு விமோசனமில்லை."

—இவ்வாறு 8—11—53-ல், சின்னமனூரில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசுகையில், நீதிக்கட்சித் தலைவரும், சென்னை சட்டசபை உறுப்பினருமான தோழர் பி. டி. ராசன் அவர்கள் முழங்கினார்.

மேலும் அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:
"இராசகோபாலாச்சாரியார் இன்றையத் தினம் இந்த நாட்டை ஆளத் தகுதியற்றவராகிவிட்டார் என்று சொல்கின்றேன். அவர் பதவியை விட்டுப் போக வேண்டும் என்பது என் ஆசையல்ல; ஆனால், அவர் மரியாதையைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமானால், மக்கள் சொல்வதைக் கேட்க வேண்டும்."
"இன்று சென்னை மாகாண

(3-ம் பக்கம் பார்க்க)

புது பருத்தி மில்

டாக்காவுக் கருகில். புது பருத்தி மில், அடுத்த 6 மாதத்தில் வேலை செய்ய ஆரம்பிக்கவிருக்கிறது. இயந்திரங்கள் இப்போது பொருத்தப்பட்டு வருகின்றன. இந்த பிரதேசத்தில், மில் தொழிலாளர்களுக்கான வீடுகள், ஆஸ்பத்திரிகள், பள்ளிக்கூடங்கள் எல்லாம் கட்டப்படுகின்றன.

பயிரை மேய வேலியே உதவியது!

செய்ரோ, நவ. 11—
செய்ரோ சர்வதேச விமான நிலைய கண்ட்ரோலர்-ஜெனரல், 50,00,000 பவுன் வரை, தங்கம் கள்ளத்தனமாகக் கடத்திச் செல்ல உதவியதாக இருகுற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டிருக்கிறார்.

ராஜன் சீற்றம் கண்டு சி. ஆர். நடுக்கம்!

அது அல்ல அருத்தம்— இது அல்ல பொருள் என்று தண்[illegible]டுகிறார்!

கொஞ்சினாலும் கெஞ்சினாலும் 'குரங்கு' சேட்டையை மறக்கவில்லை!

சென்னை, நவ. 11—
நேற்று மாலை, முத்தியாலு பேட்டை இளைஞர் காங்கிரசின் சார்பில் நடைபெற்ற நேரு பிறந்த நாள் விழாக் கூட்டத்தில் ஆச்சாரியார் பேசும்போது, சேலத்தில் நீதிக் கட்சி பற்றி அவர் பேசியது குறித்து, குறிப்பிட்டதாவது:—

"ஜஸ்டிஸ் கட்சி பற்றி நான் சேலத்தில் சொன்னது பற்றி சிலருக்குக் கோபம். நான் சொன்னதன் பொருளை அவர்கள் சரியாகத் தெரிந்து கொள்ளவில்லை."

"ஜஸ்டிஸ் கட்சி காங்கிரசுக்கு விரோதமாக இருந்தது. ஆனால் அதிலிருந்த தலைவர்கள், அறிவாளிகள்: நிலைமையை உணர்ந்து காங்கிரஸ் அரசாங்கத்தை ஆதரித்து வருகிறார்கள்; காங்கிரஸ் கட்சி இல்லாவிட்டால் ஏற்படும் நிலையை உணர்ந்து, அபாயத்தை அறிந்து, ஆதரவு குறையக் கூடாது என்று அரசாங்கத்தை ஆதரித்து வருகிறார்கள்."

"ஊரில் போலீஸ் இன்ஸ்பெக்டர் மாறினால் சந்தோஷப்படும் திருடனைப்போல அல்லாமல், யோக்கியமானவர்கள், வேறு இன்ஸ்பெக்டரானாலும் தேவை என்று அவரைக் காப்பாற்றுவது போல, அந்த அறிவாளிகளான தலைவர்கள் ஆதரித்து வருகிறார்கள்."

"தோழர் ராமசாமி முதலியார், ஜஸ்டிஸ் கட்சிக்குத் தான் போல இருந்[illegible] அவர் இப்போது காங்கிரஸ் கட்சியின் முதல் மெம்பர் தேசபக்தர்; அங்கும் இங்கும் போய் தொண்டு செய்து வருகிறார். அவர் சகோதரர் தோழர் லட்சுமணசாமி முதலியாரும் அப்படியே. தோழர் பி. டி. ராஜன் 250 பேர் கொண்ட பெரிய அசெம்பிளியில் ஜஸ்டிஸ் கட்சியின் ஒரே பிரதிநிதி அவர் அரசாங்கத்தை ஆதரிக்கிறார்."

"இதன் அர்த்தமென்ன? அறிவாளிகளான தலைவர்கள் விஷயத்தை உணர்ந்திருக்கிறார்கள். காங்கிரஸ் அரசாங்கம் இருந்தால்தான் அமைதி என்று ஆதரிக்கிறார்கள்."

"ஒரு கட்சி என்று இருந்தால் இரண்டுவிதமாக இருக்கத்தான் இருக்கும் ஜஸ்டிஸ் கட்சியில், சிறியவர்கள், பழைய விரோதத்தை மறக்காமல் வைத்துக்கொண்டு கட்டு வருகிறார்கள்."

"தலைவர்களைப் பற்றி சொன்னதில் தோழர் மமதை உண்மையை எடுத்துக்கொள்ள லாம் அவர் ஜஸ்டிஸ் கட்சிக்கு தான் என்ற கோபம் போல் இருந்தவர் எனலாம்; ஆனால், அவர் என்னை [illegible] ஆதரித்து நிற்கிறார். ஜஸ்டிஸ் கட்சிபற்றி நான் சொன்னது இது. ஏதோ தவறாக அர்த்தம் செய்து கொண்டு [illegible] கோபம் கொண்டிருக்கிறார்கள்."

முன்னாள் முதலமைச்சர்களுக்கு வசைமாரி

அமைச்சர் சுப்பிரமணியத்தின் குரு பக்தி!

பொள்ளாச்சி, நவ. 10—
"மனித சமுதாயத்தைக் காப்பாற்றும் ஒப்பற்ற தலைவர்கள் நேருஜி, ராஜாஜி. என்று உலகம் முழுவதும் பாராட்டுகிறது. இவர்களது தலைமையை நாம் இழக்கக் கூடாது. பிராமணர், பிராமணரல்லாதார் என்ற குறுகிய மனப்பான்மை பிரசாரத்தை நம்பவேண்டாம். நிதி மந்திரியாகிய எனது அனுபவத்திலிருந்து, நான் சொல்வது என்னவெனில், சென்ற 18 மாதங்களில், ராஜாஜி காலத்தில் அதிகப் படியான பிராமணரல்லாதார், சர்க்கார் உத்தியோகம் பெற்றிருக்கின்றனர் முன்பிருந்த குமாரசாமி ராஜா, ஓமந்தூர் ரெட்டியார் காலத்திலும்கூட இத்தனை பிராமணரல்லாதாருக்கு வேலை கிடைக்கவில்லை. பல பெரிய பதவிகளுக்கும் பிராமணரல்லாதார் நியமனம் பெற்றுள்ளனர்."
என நிதி அமைச்சர் சுப்பிரமணியம் பொள்ளாச்சியில் பேசியிருக்கிறார்.

ஐவர் சிறையில்
இன்று
72-வது நாள்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை : 11—11—1953 புதன்

வஞ்சர் நிறை நெஞ்சம்!

நமது தி. மு. கழகப் பொதுச் செயலாளர் உள்ளிட்ட ஐந்து தலைவர்களும், சென்னை மாநில முதல் மாஜிஸ்திரேட் கொடுத்த தண்டனைப்படி, சென்னை சிறையில் தொல்லைகளை அனுபவித்துக்கொண்டு வருகிறார்கள். அவர்களுக்கு மாஜிஸ்திரேட் கொடுத்துள்ள தண்டனை குறைவாக இருக்கிறது என்றும், மேலும் தண்டனையைக் கூடுதலாக்க வேண்டும் என்றும் சென்னை சர்க்கார் சார்பில், உயர்நீதி மன்றத்தில் ஒரு ரிவிஷன் மனு கொடுக்கப்பட்டு இருக்கிறது. மனுவையும் ஏற்றுக்கொண்டு சிறையில் வாடிக் கிடக்கும் தலைவர்களுக்கு அறிக்கையும் அனுப்ப நீதிபதி கட்டளையிட்டு விட்டார். வழக்கு இனி விசாரிக்கப்படும்.

நமது தலைவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்பது குறித்தும், பொதுவாக நமது தோழர்கள்மீது சர்க்காரால் தொடுக்கப்பட்டுள்ள வழக்குகள் அனைத்தையும், குறிப்பாக தூத்துக்குடி சதி வழக்கையும் வாபஸ் பெற வேண்டும் என்பது பற்றியும், இரண்டு திங்களுக்கு மேலாகவே, திராவிடம் எங்கும் கொதிப்பேற்பட்டு இருக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மை. திராவிடர் கொதிப்படைந்திருந்த போதிலும், அமைதி கெடும் முறையிலோ, கலகமூட்டும் போக்கிலோ, கண்ணியமிழக்கும் வகையிலோ நடந்து கொண்டுள்ளார்கள் என்ற கதை இல்லை. அமைதி காத்தே வருகின்றனர், தி. மு. கழகத் தோழர்கள்.

இருந்தாலும், தலைவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்றும், வழக்குகளை வாபஸ் பெறவேண்டும் என்றும், ஆர்வத்தோடு ஆவேசம் ஆத்திரம் காட்டாமல், அமைதியாக இடையறாது கிளர்ச்சி செய்து வருகின்றனர், தி. மு. கழகத் தோழர்களும், திராவிடப் பெருங்குடி மக்களும்.

—— அமைச்சர் ஆச்சாரியார், இயற்கையிலேயே எரிவுள்ளமும் பழி வாங்கும் குணமும் கொண்டவர் [illegible] இருந்தபோதிலும், திராவிடர்களின் கோ[illegible]கு மறுப்பு கூறும் முறையில், வாய்ப்பு நே[illegible]தெல்லாம் ஏதேதோ உண்மைக்குப் புறம்பானவை[illegible]றத் தவறியதே கிடையாது. இந்த பலக் கூற்[illegible] திருவொற்றியூர் பேச்சில் அமைச்சர் ஆச்சாரியார் கூறியுள்ளது சிகரம் போல் இருப்பதாகும். அந்தப் பேச்சில், இது பற்றிக் குறிப்பிட்டுள்ளதை மட்டும் கீழே தருகிறோம்:—

"[illegible]கள் (எதிர்ப்பவர்கள்) பத்திரிகைகளை நான் படிக்கும் போது எனக்கு ஆச்சரியம் ஏற்படுகிறது. 'தலைவர்களை' இவர்கள் சிறையில் போட்டுவிட்டார்கள் என்கிறார்கள். இது ஒரு கிளர்ச்சி. இவர்களை நானா சிறையில் வைத்தது? நீதி நியாயஸ்தலத்தில் வழக்கு நடந்தது. 10 தினங்கள் பேசினார்கள். சர்க்கார் தரப்பில் சொன்னதைவிட அதிகம் பேசினார்கள். மாஜிஸ்திரேட் ரூ 500 அபராதம் விதித்தார். சிறைக்கு வேண்டாம், அபராதம் விதிக்கிறேன் என்பது மாஜிஸ்திரேட் தீர்ப்பு. ஆனால் சிறைக்குள்தான் நாங்கள் போவோமென்று போனார்கள்."

"மாஜிஸ்திரேட் அவர்களை சிறைக்கு அனுப்பவில்லை. நானும் அவர்களை அனுப்பவில்லை. அவர்களே அவர்களை அனுப்பிக் கொண்டார்கள். நாளையே அவர்கள் வெளிவந்து விடலாம். சர்க்கார், செய்தது தவறு என்றால், அப்பீல் செய்யலாம். நிலை இப்படி இருக்க, யாரோ சிறையில் அவர்களைத் தள்ளிவிட்டதாக திரித்துக்கூறி குழந்தைகளை என்னிடம் விரோதம் கொள்ளச் செய்வது சரியல்ல, நாளை இதேபோல் இதர இவர்கள் மீது சொல்லலாம். இப்படியெல்லாம் சொல்வது பொய்."

"சொத்து ஜப்தி செய்யப்படுகிறதே என்ற ஒரு கூக்குரல் இப்போது. ரூ. 500 கட்டிவிட்டால், ஜப்தி நடக்காதே."

"கலவர வழக்குகளை வாபஸ் செய்ய வேண்டுமென்பது ஒரு சிலர் கிளர்ச்சி. வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது. விசாரணை நடந்து வருகிறது. சாட்சியங்கள் விடப்படுகின்றன. முடிவு எப்படி இருக்கும் என்று தெரியாது. கோர்ட் விவகாரங்களில் அதிகாரிகள் பிரவேசிக்கக்கூடாதென்ற [illegible] ஏற்படுத்தப்பட்டு, அதன்படி நடந்து வருகிறது. இந்த நிலையில் வெறும் கூப்பாடு கோஷங்களைக் கண்டு மக்கள் ஏமாந்துவிடக் கூடாது."

நமது தலைவர்களை சிறைக்கனுப்பியது, மாஜிஸ்திரேட்டும் அல்ல, தானும் அல்ல, அவர்களே அவர்களை அனுப்பிக் கொண்டார்கள் என்று அமைச்சர் ஆச்சாரியார் அன்று வாதித்திருக்கிறார். இது கூற்றுக்கு நிற்காத பொய்யுரை என்பதை அன்றே நாம் எடுத்துக் காட்டி இருக்கிறோம்.

ஆச்சாரியாரின் பொருந்தாக் கூற்றை, இன்னும் விளக்கமாக நீண்ட கால அனுபவம் உடைய தோழர் டி. எஸ். சொக்கலிங்கம் அவர்களை ஆசிரியராகக் கொண்ட 'ஜனயுகம்' எழுதியுள்ள விளக்கத்தையும், நாம் வெளியிட்டிருந்தோம்.

அரசியல் கிளர்ச்சிகளில் ஈடுபட்டுள்ள எவர் மீது வழக்குத் தொடுப்பதாக இருந்தாலும், போலீஸ் உயர்தர அதிகாரிகள், சர்க்காரின் ஒப்புதலை முன் கூட்டியே பெற்றுத்தான் வழக்குத் தொடுப்பது முறை—கட்டாயமும் கூட. இந்த நியதிப்படியே, நமது தலைவர்கள் மீது வழக்கு தொடுக்க போலீசுக்கு அனுமதியளித்தவர் கனம் ஆச்சாரியார் அவர்களே யாகும் என்பது வெளிப்படை. உண்மை இவ்வாறு இருக்க, அவர்கள் சிறையில் இருப்பதற்கும் தமக்கும் ஒரு தொடர்பும் கிடையாது என்று அமைச்சர் ஆச்சாரியார் பேசி வருவது படுகட்டினப் பொய்யாகும்.

சட்டத்தை மீறுகிறவர்கள் யாராக இருந்தாலும், பாரபட்சம் பார்க்காமல், அவர்கள்மீது வழக்குத் தொடுப்பது தான் நியாய புத்தி படைத்த சர்க்காரின் கடமையாகும். இதைத்தான் மக்கள் வரவேற்கவும் செய்வார்கள்.

ஆனால், அமைச்சர் ஆச்சாரியார், இந்த நியாய புத்திக்குக் கட்டுப்பட்டு நடந்து கொண்டிருக்கிறார் என்று சொல்வதற்கில்லை.

இந்த நியாயத் தவறையும் 'ஜனயுகம்' அன்றே எடுத்துக் காட்டியிருக்கிறது. அதாவது சித்தூர் எல்லைக் கிளர்ச்சியில் ஈடுபட்ட சொந்தக் கட்சி எடுபிடிகள் மீது, வழக்குத் தொடுக்க ஆச்சாரியார் அவர்கள் முன்வரவில்லை. அதே குற்றங்களைச் செய்ததாகச் சொல்லப்படும் நமது கழகத்தவர்கள் மீது மட்டும் வழக்குத் தொடுத்து, அனைவரையும் தண்டனை பெறவும் செய்து இருக்கிறார் ஆச்சாரியார்.

தமது கையில் சிக்கியுள்ள அதிகாரத்தை ஆளுக்கொரு மாதிரியாக துஷ்பிரயோகம் செய்தவரும் அமைச்சர் ஆச்சாரியார்தான். நாம் ஏதோ உண்மைக்கு மாறாக இவர்மீது பொய்ப் பிரசாரம் செய்து வருவதாக நம்மவர்மீது பழிச் சுமத்துகிறார். சிறக,

நமது தலைவர்கள், தங்கள் விருப்பப்படியேதான் சிறைக்குப் போயிருக்கிறார்கள் என்று ஆச்சாரியார் கூறுவதை விவாதத்திற்காகவாவது, சரியானது என்று ஒப்புக்கொள்ளுவோம். தலைவர்களின் தண்டனை காலம் முடிந்து, விடுதலை பெற்று நம்முடன் அளவளாவும் நாள் நெருங்கிக்கொண்டே இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில், அவர்களுக்கு மாஜிஸ்திரேட் கொடுத்துள்ள தண்டனையை மேலும் கூட்ட வேண்டும் என்று சர்க்கார் சார்பில் உயர் நீதிமன்றத்தில் ரிவிஷன் மனு கொடுக்கப்பட்டிருக்கிறதே, இந்த வெறுக்கத்தகுந்த நடவடிக்கைக்கு யார் பொறுப்பாளி என்று அமைச்சர் ஆச்சாரியாரைக் கேட்கிறோம்.

இதற்கு சர்க்கார் சார்பில் மனு கொடுத்த வழக்கறிஞர் தான் பொறுப்பாளியா அல்லது முதலமைச்சர் ஆச்சாரியார் தான் பொறுப்பாளியா என்ற ஐயப்பாடு ஒருவருக்கும் எழ நியாயமே கிடையாது. ஆச்சாரியாரின் எரி உள்ளமே இந்த ரிவிஷன் மனுவிற்குக் காரணம் என்பது பகிரங்க ரகசியம்.

கோழி திருடிவிட்டு கூடக் குலாவினவள் கதைபோல நமது தலைவர்களைச் சிறையில் தள்ள எல்லா முறைகளையும் தாமே முன்னின்று மேற்கொண்டு செய்துவிட்டு, பொது மக்களை ஏய்க்க, முன்னர் பசப்பு மொழி புகன்ற ஆச்சாரியார் அவர்கள் இதற்கென்ன விளக்கம் தரப் போகிறார் பார்க்கலாம்.

அமைச்சர் ஆச்சாரியார் அக்கிரம செயலில் மறைந்து கிடக்கும் உண்மை குன்றின்மேல் இட்ட விளக்குபோல தெரிகிறது. இதில் வேறு [illegible] சொல்வதற்கு ஒரு துளியும் இடம் கிடையாது.

எப்படியும் எதிர்ப்பாளர்களை, கருத்து மாறுபாட்டினரை, பழி வாங்க வேண்டும்—இம்சிக்க வேண்டும்—தொல்லை கொடுக்க வேண்டும்—என்ற ஆச்சாரியாரின் அற்ப மதிதான் அம்பலமாகிறது. இந்த ஒன்றுக்குத்தான், அவர் கையில் சிக்கியுள்ள அதிகாரம் நாட்டு மக்களுக்குப் பயன்படுகிறது. இதுதான், நம்மிடம் சந்தர்ப்ப தோஷத்தால் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்தைக் கொண்டு, செய்து முடிக்க வேண்டிய நாட்டுச் சேவை என்று அவர் எண்ணிக்கொண்டு இருக்கிறார். அவர் ஆசையும் தீர்ந்து போகட்டும். ஆனால், நொள்ளைக் கண்ணராக இருந்து கொண்டு, நொள்ளைக் கண்ணன் என்று பிறர் அழைப்பது கண்டு மட்டும் அவர் ஆத்திரம் கொள்ளாமல் இருக்க வேண்டும்; நொள்ளைக் கண்ணை மறைக்கும் பேச்சுத் திரிவையும் கைவிட வேண்டும்.

முறைக்கு[illegible] கொண்டு [illegible] யிற்றை மறைக்கும் முயற்சியில் ஈடுபட்டு இடர்பட வேண்டாம் என்று ஆச்சாரியார் அவர்களை எச்சரித்துக் கொள்கிறோம்.

காங்கயம் தேர்தல்: பாராட்டும் நன்றியும்

காங்கயம் தொகுதி அணைத் தேர்தலில் காங்கிரஸ் அபேட்சகர் தோழர் சுப்பராயனார் அவர்களைத் தோற்கடித்து, தோழர் கே. ஜி. பழனிச்சாமி அவர்கள் வெற்றி பெற்றார். நாட்டின் முன்னேற்றத்தில் விருப்பமுள்ளவர்களுக்கு இது மகிழ்ச்சிக்குரிய செய்தி என்பதில் ஐயமில்லை.

தி. மு. கழக தலைமை நிலையத்தின் வேண்டுகோளுக்கிணங்க, அயராது பணியாற்றி தோழர் பழனிச்சாமிக்கு வெற்றி கேடித் தந்த காங்கயம் வட்டார தி. மு. கழகத் தோழர்களுக்கும், கடமையை உணர்ந்து, தங்கள் தங்கள் வாக்குகளை கே ஜி பழனிச்சாமி அவர்களுக்கு அளித்த காங்கயம் தொகுதி மக்களுக்கும் தி. மு. கழகத்தின் சார்பில் எமது இதயங் கனிந்த நன்றியையும், மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

மக்கள் அன்பையும், ஆதரவையும் பெற்று வெற்றி பெற்ற தோழர் கே. ஜி. பழனிச்சாமி அவர்களை நாம பாராட்டுவதோடு, அவர், சட்டசபையில் மக்களுக்காகவும், மக்களுக்கு நலன்பயக்கும் திட்டங்களுக்காகவும் பெரிதும் பணியாற்றுவாரென எதிர்பார்க்கிறோம்.

தோழர் பழனிச்சாமி அவர்களின் வெற்றி, ஆச்சாரியாரின் எதேச்சாதிகார புதிய கல்வித் திட்டத்தை எதிர்த்து மக்கள் அளித்த தீர்ப்பாகும். இதை ஆச்சாரியார் உணர்ந்து அவரது போக்கை மாற்றி அமைத்துக் கொள்வாரென நம்புகிறோம்.

ஏ கோவிந்தசாமி எம்.எல்.ஏ.
பொறுப்பாளர்,
தி. மு. கழகத் தலைமை நிலையம்,

தொழிலதிபர்களுக்கு பணிந்து பேசுகிறார் டி. டி. கே.

ராஜகோட், நவ. 9—

"நாட்டில் பெரிய கைத்தொழில்களைப் பாதிக்கும் வகையில், சிறிய கைத்தொழில்களுக்கு உதவியளிக்கும் எண்ணம் சர்க்காருக்குக் கிடையாது: ஆகவே, சிறு கைத்தொழில்கள் அபிவிருத்தியடைய உதவுவதற்காகச் சில பெரிய கைத்தொழில்கள்மீது 'செஸ்' வரி விதிக்கலாமென்று சில வட்டாரங்களிலிருந்து கூறப்படும் யோசனைகள் சாத்தியமானவையல்ல," என இந்திய சர்க்கார் கைத்தொழில் வர்த்தக மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி கூறினார்.

"நாட்டில் பெரிய கைத்தொழில்களுக்கும், பல்வேறு வகையிலுள்ள கிராமக் குடிசைத் தொழில்களுக்கும் இடையே இணைப்பை ஏற்படுத்துவது மாநில மத்திய சர்க்கார்களுக்கு பெரும் பிரச்சினையாக இருக்கிற"தென்றார்.

சிறை மீண்டோருக்கு வரவேற்பு

சென்னை, நவ 9—

ஆறு மாத கண்டனத்தை சபர் ஜாமீனும், 1 மாதக் கடுங்காவல் தண்டனையும் அடைந்த 10-வது வட்ட தி. மு கழக உறுப்பினர் தோழர் பலராமன் அவர்களுக்கு தோழர் ஏ. எஸ். ராமன் 1 மாத சிறை தண்டனை அனுபவித்து, 7—11—53 காலை தோழர் டி ஜி. சாமி அவர்களால் சிறைவாயிலில் மாலை சூட்டி வரவேற்கப்பட்டு, சிற்றுண்டி, தேனீர் விருந்தளிக்கப்பட்டது.

ரூ. 5 லட்சம் மதிப்புள்ள சர்க்கார் சொத்து சேதமாம்

லட்சுமணபுரி, நவ 10—

லட்சுமணபுரி மாணவர்கள் மனப்போக்கு இன்னும் புரியவில்லை. சமீபத்தில் ஏற்பட்டக் கலவரத்தில் சுமார் 1000 பேர் வளைக்கப்பட்டுள்ளனர். ரூ. 5 லட்சம் மதிப்புள்ள சர்க்கார் சொத்துக்கள் சேதமாயுள்ளது. கலவரம் ஏற்பட்டுள்ள பகுதிகளுக்குக் கூட்டு அபராதம் விதிக்கலாமா என்பது குறித்து மாநில சர்க்கார் ஆலோசித்து வருவதாகத் தெரிகிறது.

சோப் உற்பத்தி அதிகரிப்பு

கராச்சி, நவ. 11—

சுக்கூரிலுள்ள 12 தொழிற்சாலைகளில் ஆண்டிற்கு, ரூ. 12,00,000 சோப்புகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. சுமார் 300 தொழிலாளர்கள் இதில் வேலை செய்கிறார்கள்.

'தூத்துக்குடி தி. மு. க......

(1 ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ணத்திலிருந்து, ஆந்திர மாகாணம் பிரிந்து விட்டது. அடுத்து கன்னடியரும், மலையாளிகளும் பிரியப் போகிறார்கள். இப்பிரிவினைகள் எல்லாம் அதிகார ஆசையினாலேயே நடைபெறப் போகின்றன."

"ஆந்திரப் பிரிவினையின் விளைவு என்ன? இது எப்படி முதலமைச்சர் ஆச்சாரியாரைப் பாதிக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும்."

"இராசகோபாலாச்சாரியார் எந்தத் தேர்தலிலும் நிற்காமல் நியமனத்தின் மூலம் அமைச்சரானவர் என்பது உங்களுக்குத் தெரியும். இப்பொழுது அவருக்கும் அவர் கட்சியில் உள்ளவர்களுக்கும் கருத்து வேறுபாடு வந்து விட்டது. 2 ஆண்டு கூட ஆகவில்லை. அதற்குள் ராஜாஜியை வீட்டிற்கு அனுப்பவேண்டும் என்ற முயற்சி நடக்கிறது. இந்த நிலைமையில் அவர் சேவை செய்வதற்காகவே வந்தவர் என்றால், என்ன சொல்ல வேண்டும்? 'இருக்கவேண்டும் என்று சொல்கிறவரையில் அமைச்சராக இருக்கிறேன்; போகச் சொன்னால் போகிறேன்," என்று சொல்லவேண்டும்; அதன்படியே நடக்கவேண்டும். ஆனால், அப்படிச் சொல்ல அவருக்குத் தைரியம் இருக்காது அதிகார ஆசைக்காக என்ன வேண்டுமானாலும் செய்வார்."

"இராசகோபாலாச்சாரியார், "ஆந்திரவிடயம் முடிந்த பிறகு நான் போகிறேன்" என்றார். உண்மையில், ஆந்திரப் பிரிவினைக்கு அவர் இருந்து ஒரு முயற்சி செய்தார்; சென்னையைக் காப்பாற்றினார்; அதற்காகத் தமிழர்களுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்வோம். ஆனால் அதற்குப் பிறகு, இராசகோபாலாச்சாரி, 'நான் நிலையாகவே இருக்கப் போகிறேன்; அல்லது போகப் போகிறேன்" என்று சொல்ல வேண்டும் இந்த இரண்டும் சொல்லவில்லை.

"பதவியை விட்டுப்போவது அவருக்கு வருத்தமாக இருக்கிறது. ஆதலால், அவர் செய்யக்கூடாத செயல்களைச் செய்யத் தொடங்கிவிட்டார்."

இராசகோபாலாச்சாரியார் இப்பொழுது 'ஐயம்பேட்டை சங்கதியை'த் தொடங்கி விட்டார் ஐயம்பேட்டைச் சங்கதி என்றால் என்ன தெரியுமா? சும்மா தெருவில் போகிறவர்களை வம்புக்கிழுப்பதுதான் அதைப்போல. இராசகோபாலாச்சாரியார் சேலத்தில் ஜஸ்டிஸ் கட்சியைப் பற்றிப் பேசத் தொடங்கினார். ஜஸ்டிஸ் கட்சியின் பெயரை இழுத்ததோடு நிற்காமல்; சத்தியமூர்த்தி ஐயர் பெயரையும் இழுத்திருக்கிறார்.

நம் நாட்டில்தான் எந்த மாதிரிக் கொள்கையில் நடக்க வேண்டும் என்ற முறையில் வாதம் நடந்து வருகிறது ஆனால், ஆங்கில நாட்டிலே இறந்தவர்களைப்பற்றி எந்த விதமான பேச்சும் பேசாமல் அவருடைய ஆத்மா சாந்தியடைய வேண்டும் என்று பிரார்த்தனை செய்வார்கள் ஆனால் இராசகோபாலாச்சாரி

யாரோ, செத்துப்போன சத்தியமூர்த்தி ஐயர் பெயரை இழுக்கிறார்.

1935-ல், சத்தியமூர்த்தி, 'ஜஸ்டிஸ் கட்சி செத்துவிட்டது; அதைப் புதைத்துவிட்டோம,' என்று இராசகோபாலாச்சாரியிடம் சொன்னாராம். அதற்கு இராசகோபாலாச்சாரியார், 'இப்படிச் சொல்லாதே; செத்து விட்டது, செத்து விட்டது என்று சொன்னால், மறுபடியும் பிழைத்துக்கொள்ளும்,' என்றாராம். சில பேர்களிடம், பாம்பு என்று சொன்னாலே பாம்பு வந்துவிட்டதாகவே எண்ணிப் பயப்படுவார்கள். அதைப்போல அவரும் நினைத்துவிட்டார்.

அதோடு, ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் சத்திய மூர்த்தியைக் கண்டால் பயப்படுவார்கள் என்று சொன்னாராம். ஆனால் சத்தியமூர்த்தி அமைச்சராக வேண்டும் என்று அந்தக் காலத்தில் எவ்வளவோ ஆசைப்பட்டார். அவர் அமைச்சராவதைத் தடுத்தது ஜஸ்டிஸ் கட்சியா? இதே இராசகோபாலாச்சாரி தானே? இவர்தான் இன்று சத்தியமூர்த்தியை உதாரணம் காட்டிப் பேசுகிறார்.

ஜஸ்டிஸ் கட்சி, யாருக்கும் அஞ்சக்கூடியதல்ல. ஜஸ்டிஸ் கட்சியைப் பற்றிக் கேவலமாக நினைக்கிறார் இராசகோபாலாச்சாரியார்.

அவர் சொல்கிறார்: 'ஜஸ்டிஸ் கட்சியிலிருந்து வந்தவர்கள் திராவிடர் கழகத்தாரும், திராவிட முன்னேற்றக் கழகத்தாரும்," என்று; அதனால் பாவம் ஒன்றுமில்லையே? ஏதாவது அவர்கள்மீது விரோதமிருந்தால் சட்ட ரீதியாகச் செய்யட்டுமே!

இராசகோபாலாச்சாரியார் பதவிபெற்றபோது அவரை வரவேற்பதாக ஏன் கூறினேன் என்றால், "ராஜாஜி பெரிய மனிதர்; பல துறைகளில் அனுபவம் பெற்றவர்; இந்த நாடு அவருடைய அனுபவத்தின் பயனை அடையும்" என்று எதிர்பார்த்துத்தான். ஆனால் இன்றைய நிலையைப் பார்க்கும்பொழுது அப்படிச் சொன்னதற்காக வருத்தப்படுகிறேன்.

இராசகோபாலாச்சாரியார், நியாயத்திற்குக் கட்டுப்பட்டு, சத்தியத்திற்குக் கட்டுப்பட்டு ஒழுங்காக நடந்துகொள்வார் என்ற முறையில்தான் வரவேற்றேனே தவிர, அவரிடம் ஏதாவது பதவி பெற வேண்டும் என்பதற்காக அல்ல. பதவியை விரும்பியிருந்தால் பெற்றிருப்பேன். அவர் நியாயமாக நடப்பார் என்றுதான் அன்று வரவேற்றேன். ஆனால் இன்று அதிகார ஆசையினால் நியாயம் தெரியாமல் நடக்கிறார். எவ்வளவு மோசமாகப் பேச வேண்டுமோ, அவ்வளவு மோசமாகப் பேசுகிறார்.

திராவிடக் கழகத்தாரும், திராவிட முன்னேற்றக் கழகத்தாரும் திரும்பவும் வெள்ளையர் ஆட்சியை வரவேற்கிறார்கள் என்று சொல்கிறார் அதற்குமுன் ஒரு பீடிகை போட்டுக்கொண்டார். 'வெள்ளையர் போய்விட்டார்கள் என்று ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் வருந்தப்பட்டார்கள்; ஏன் என்றால், இந்த ஆட்சியைக் காங்கிரசார் கையில் கொடுத்துப் போய்விட்டார்கள்' என்று சொன்னார்.

உண்மைதான்; ஆளத் தெரியாதவர்களிடத்தில் ஆட்சியைக் கொடுத்தார்களே என்று வருத்தம்தான்.

"உங்கள் ஆட்சியைவிட, வெள்ளைக்காரர்கள் ஆட்சியே மேலானது' என்று கிருபளானியும், ஜெயப்பிரகாஷ் நாராயணும் சொல்லியிருக்கிறார்கள். உங்களைச் சேர்ந்தவர்கள்தானே அவர்கள்?

ஆச்சாரியார் மீது 'நம்பிக்கை இல்லை' என்ற பேரலைகள்!

கூட்டுத் தோழர்களின் நம்பிக்கையை இழந்தவர் நாட்டு மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக முடியுமா?

மதுரை, நவ. 9—

சென்னை முதலமைச்சர் ஆச்சாரியார் மீது நம்பிக்கையில்லாத தீர்மானம் கொண்டுவர ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருவதாகத் தெரிகிறது.

மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, திருச்சி, தஞ்சாவூர் ஆகிய ஐந்து மாவட்டங்களில் உள்ள சென்னை சட்ட சபை உறுப்பினர்கள், மேல் சபை உறுப்பினர்கள் ஆகிய 59 பேர்களில் 46 பேர் ஆச்சாரியார் மீது கொண்டுவரப்படும நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் கையெழுத்துப் போட்டிருப்பதாகவும், இக் கையெழுத்துக்களுடன், மதுரை மாவட்டக் காங்கிரஸ் குழுத் தலைவர் டி. ஜி. கிருஷ்ணமூர்த்தி இன்று மாலை திருவனந்தபுரம் எக்ஸ்பிரசில் சென்னைக்குச் சென்றிருப்பதாகவும் கூறப்படுகிறது.

(த-நா.)

வேலூர், நவ. 9—

"முதலமைச்சர் ராஜகோபாலாச்சாரியாருக்கு எதிராக இன்னும் இரண்டு நாட்களில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைச் சமர்ப்பிக்கப் போகிறேன்,"

என, தோழர் கே. மாசிலாமணி, எம். எல் ஏ, அவர்கள், அரியூர் கிராமத்தில் நடந்தகூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில், 125 காங்கிரஸ் எம். எல். ஏ-க்களில், 40 பேர் கையெழுத்திட்டுள்ளதாக அவர் சொன்னார்.

"மந்திரி சபை முழுவதுமே திருத்தி அமைக்கப்படும்; இன்னும் இரண்டு மாதங்களில் புது மந்திரி சபை ஒன்று ஏற்படும்; அந்த மந்திரி சபை வந்த பிறகு, மதுவிலக்கு கூட ரத்து செய்யப்படும்," என்றும் அவர் சொன்னார்.

—"மெயில்"

சென்னை, நவ. 10—

சட்ட சபை காங்கிரஸ் கட்சியை உடனடியாகக் கூட்ட வேண்டுமென்று கோரும் மனு, நாளைய தினம் முதலமைச்சர் ஆச்சாரியாரிடம் கொடுக்கப்படும். இந்தச் செய்தியை டாக்டர் வரதராஜுலு நாயுடு, இன்று நிருபர்களிடம் கூறினார்.

இந்த மனுவில் 80 எம். எல். ஏ-க்கள் கையொப்பமிட்டிருப்பதாக அவர் அறிவித்தார். இந்த மனுவை ஆச்சாரியாரிடம் யார் நேரடியாகக்கொடுப்பதென்பது பற்றி, இன்னும் முடிவாகவில்லை.

"சட்ட சபை காங்கிரஸ் கட்சியை இப்போது கூட்டுவதற்கு காங்கிரஸ் பார்லிமென்டரி போர்டின் உத்தரவு தேவையா இல்லையா?" என ஒரு நிருபர் கேட்டதற்கு, போதிய மெஜாரிட்டி இருக்கும்போது பார்லிமென்டரி அனுமதி தேவைதானா என்று எனக்குத் தெரியவில்லை என்றார்.

—ந. நி.

குல்லுகபட்டருக்குக் காமராஜர் காட்டும் நல்ல பாதை

"மகாராஜாக்களே மறைந்தனர்! மந்திரிகள் எம்மாத்திரம்?"

"என்னைக் கிளப்பப் பல சக்திகள் பாடுபடுகின்றன!"

"ஜனநாயக அரசாங்கத்தில் மக்களின் ஆதரவு இல்லாவிட்டால், யாரும் மந்திரியாக நீடித்து இருக்க முடியாது; ஒருதரம் மந்திரியாக வந்துவிட்டால், யாரும் அசைக்க முடியாதென்ற தவறான எண்ணம் நிலைத்திருக்கிறது; அது மக்களின் ஆதரவைப் பொறுத்ததே அன்றி தனிபட்ட ஒருவரின் மனப்பான்மையைப் பொறுத்ததல்ல."

"மகாராஜாக்களே போய்விட்டார்கள். மந்திரிகள் என்றுமே மந்திரிகளல்ல! மந்திரிகளாக இருந்தாலென்ன? காங்கிரஸ் கமிட்டிகளில் ஊழியம் செய்தால் என்ன? எல்லாம் ஒன்றுதான்; நான் எது கூறினாலும், பல்வேறு அர்த்தம் கொள்கின்றனர். பத்திரிகைக்காரர்களும் சாமர்த்தியமாய் வேறொரு அர்த்தம் கொள்கின்றனர்"

"என்னைக் கிளப்ப பல சக்திகள் பாடுபடுகின்றன; அதற்காக நான் பயப்படவில்லை. அதைப் பற்றி குறையாக எடுத்துக் கூறவும் நான் விரும்பவில்லை"

"காங்கிரஸ்காரர்களையும், மந்திரிகளையும் ஒன்று கேட்டுக்கொள்ளுகிறேன். காங்கிரஸ் இயக்கத்தை பலவீனப்படுத்தாதீர்கள். மந்திரிகளும் காங்கிரசைச் சேர்ந்தவர்கள்தான். வெளியே போய், கருத்து வேறுபாட்டை விளக்கிக் கூறவோ, பத்திரிகைகளில் எழுதவோ வேண்டாமென்று கோருகிறேன்."

"மில் துணிக்கு விற்பனை வரியை வெகு அதிகம் உயர்த்துங்கள்; 8 அணாவானாலும் சரி;—மத்திய சர்க்காரும் வழிக்கு வருவார்கள். சும்மா இருக்க வேண்டாம். ஒன்றும் செய்யவில்லையே என்று கைத்தறி நெசவாளருக்குக்கூட நம்மிடமும், எல்லா அரசியல் கட்சிகளிடமும்கூட கோபம் ஏற்பட்டிருக்கிறது."

—இவ்வாறு, திருச்செங்கோட்டில் நடைபெற்ற அரசியல் மாநாட்டில் தமிழ்நாடு காங்கிரஸ் குழுத் தலைவர் கே. காமராசர் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

"சமாச்சாரத்தை ஒளித்தால் விபரீதம் ஏற்படுகிறது. அந்த நல்ல பத்திரிகைகள் விட்டுவிடுகின்றன; ஆனால், உதவாக்கரைப் பத்திரிகைகள் அவைகளை காது, மூக்கு வைத்துப் போட்டுவிடுகின்றன. தமிழ் நாட்டில் இந்த நிலை மாறவேண்டும். பத்திரிகைகளில் அதிகம் எழுதுவதால் தகராறு தீர்ந்துவிடாது."

"நாம் செய்யவேண்டிய வேலை அதிகமிருக்கிறது. ஜாதியைப் போக்கவேண்டும்; லஞ்சம் நம்மை ஒழித்துவிடுமோ என்று அஞ்சவேண்டியிருக்கிறது."

"சட்ட பூர்வமாக ஜாதியை ஒழிக்கவேண்டும். ஜாதி கலப்பு மணம் செய்பவர்களோ அவர்களுக்கே உத்தியோகம் இலவசக் கல்வி ஏற்படுத்தலாம் என யோசனை கூறுகிறேன்.

"தேர்தலில், ஜாதியின் பேரால் ஓட்டுக் கேட்பது ஒழிய வேண்டும்."

"சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் பலர் இன்னும் சரியாக நடப்பதில்லை அதை மறைப்பதில் பயனில்லை. மந்திரிகளைவிட சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு அதிக மரியாதை இருக்கிறது. மக்களின் கஷ்டங்களைப் போக்க நாம் தைரியமாக இருக்க வேண்டும்."

"அதிகாரம் கூட்டமாக ஓரிடத்தில இருக்கக் கூடாது; பரவலாக இருப்பது நலம். ஜில்லா போர்டுகளைக் கலைத்த அன்றே தேர்தலை நடத்தியிருக்க வேண்டும். தாலுகா போர்டு வர தாமதமாகுமாதலால் ஜில்லா போர்டு தேர்தலை உடனடியாக வைக்குமாறு ஸ்தலஸ்தாபன மந்திரியைக் கோருகிறேன்."

மந்திரி ராஜாராம் நாயுடு பேசுகையில், "ஜில்லா கவுன்சிலுக்கு அதிகாரம அளித்தால், தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபை மெம்பர்கள் முதலியவர்கள் பங்கெடுக்கலாம்," என்றார்.

வரவேற்புக் கழகத் தலைவர் டாக்டர் சுப்பராயன் பேசுகையில், "இது நல்ல சந்தர்ப்பம்; மந்திரி ராஜாராம் நாயுடு, ராஜாஜிக்கு வேண்டியவர்; காமராஜுக்கும் நண்பர். அவரையும், தலைவரையும், திருப்பாலையும் வரவேற்கிறேன்," என்றார்.

முடிவில், தமிழ் நாட்டில் சென்னை சட்டசபைக் காங்கிரஸ் கட்சியில் பூசல் காரணமாக ஏற்பட்டுவரும சம்பவங்கள் பற்றி மாநாடு அக்கரையுடனும், கவலையுடனும் நோக்குகிறது எனவும், இதுபற்றிய விவாதத்தை மேடையிலோ, பத்திரிகையிலோ அனுப்பாமல் இருக்குமாறு கேட்டுக்கொண்டும தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மத்திய சர்க்கார் ஏற்பாட்டிற்கு எல்லா இடங்களிலும் அதிருப்தி

கட்சி சார்பற்று இயங்கும் அரசாங்க அலுவலர் அமைப்பே சிறப்பானதாகும்

சர்க்கார் பதிவில்லாத அலுவலர் குழு முன்னாள் தலைவர் உள்ளக்கிடக்கை

மதுரை, நவ. 9—

"ஒருவித உதவியும் பெற முடியாத சிப்பந்திகள், தம்மைத் தாக்கும் வறுமைக்கு ஆற்றாமல் வேறு அரசாங்கம் அமைந்தால் தமக்கு நல்ல உதவி கிடைக்குமென நினைக்கிறார்கள் இது சரியோ, தவறோ. அவர்களைப் பொறுத்த வரை அவர்கள் தமக்குள்ள தாங்கும் சக்தியைக் கடந்த நிலையில் இப்படியெல்லாம் எண்ணும்படி ஆகி வருகிறது. அவர்களை வதைக்கும் பற்றாக்குறை. அரசாங்கம் மாறினால்தான் நமக்கு நல்லது வாய்க்குமென அவர்கள் எண்ணத் தலைப்பட்டு விட்டனர். அதன் முடிவுதான் இந்திய ஜனநாயகத்திற்கு ஆபத்து என்பதை இப்போதே எச்சரித்து விடுகிறேன்."

"நல்ல வருமானப் பகுதிகளை யெல்லாம் மத்திய அரசாங்கம்தான் எடுத்துக் கொள்கிறது. வரிசை வரிசையாக புதுப் புது வரிகளைப் போட்டு மாநில வருமானத்தில் பெரும் பகுதியை எடுத்துக் கொள்ளும் மத்திய அரசாங்கம், மாநில அரசாங்க சிப்பந்திகள் ஊதிய உயர்வு வகையில் கொஞ்சமாவது கருணை காட்டலாம்; ஆனால் காட்டுவதாகத் தெரியவில்லை. இவையெல்லாம் சேர்ந்து முடிவில் ஜனநாயகத்திற்கே உலை வைப்பதில் போய் முடிந்து விடும். இதற்கு வழி செய்வது இன்றைய ஆட்சிதான் என்பதை பச்சையாகக் கூற கூச்சமாக இருந்தாலும், கூறாமல் இருக்க இயலவில்லை."

—இவ்வாறு, தமிழ் நாடு மக்கள் சோஷியலிஸ்டு கட்சி கூட்டுச் செயலாளருமான, என். ஜி. ஓ. சங்கத்தின் கூட்டுச் செயலாளருமான கே. ஜகதீசய்யர் மதுரையில் அரசாங்கச் சிப்பந்திகள் கூட்டத்தில் பேசினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது :—

"ஜனநாயக அமைப்பில் தனிப்பட்ட நபர்கள் எவ்வளவு திறமைசாலிகளாக இருந்தாலும் ஓரளவுக்குத்தான் நன்மை செய்ய முடியும். ஐக்கிய சக்தி ஏற்படுத்தி, அதன் மூலம்தான் நாட்டின் நலனைப் பெரும் அளவுக்குச் சாதிக்க முடியும்.

அரசாங்க சிப்பந்திகளின் நிலை மோசமடைந்து விட்டது. அவர்கள் வேண்டுவதெல்லாம் ஊதிய உயர்வுதான். இதைக் கூடச் செய்ய அரசாங்கம் முன்வரவில்லை.

நாட்டு நிர்வாகத்தில் முக்கியமான பொறுப்பை வகிப்பவர்கள் அரசாங்க சிப்பந்திகள் ஆயினும் அரசாங்கம் இவர்கள்மீது இன்னும் கருணை காட்டவில்லை.

எந்த ஜனநாயக நாட்டிலும் அரசாங்க சிப்பந்திகள் பொருளாதார நெருக்கடியில் அடிபட அனுமதிக்க மாட்டார்கள். சென்னை அரசாங்கச் சிப்பந்திகள் விஷயமாய் எவ்வளவு கோரியும் திருப்தியான முறையில் எதுவும் செய்யப்படவில்லை."

இராமாயணத்தில் மூன்று வகை

"வால்மீகி முனிவர், கி. மு. 4-ம் நூற்றாண்டில் இராமாயணத்தை எழுதியதாக சிலர் மதிக்கின்றனர். எனினும் மேற்படி இராமாயணத்தை எழுதுமுன் இரண்டு இராமாயணங்கள் இருந்தன,"

என்று 1915-ம் ஆண்டில், கல்கத்தா செனட் சபையில் ராவ் சாகிப் தினேஷ் சந்திரசேகரன் என்பவர் பேசினாராம். மேலும் அவர் பேசியதாவது :

"கி. மு. 1600 ஆண்டுகளுக்கு முன் கூறப்பட்ட தசரத ஜாதகம் என்னும் நூல், கி. மு. 6-ம் நூற்றாண்டில் தீட்டப்பட்டது. இதில், இராவணன், இராமன் பற்றி ஏதும் கூறப்படவில்லை. இராவணன் சீதையைத் தூக்கிச் சென்றான் என்றுகூட கூறப்படவில்லை.

இரண்டாவது வகை இராமாயணத்தில் இராவணனைப் பற்றி அதிகமாகவும், இராமனைப் பற்றி சற்று குறைவாகவுமே சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது நாமறிந்திருக்கும் இராமாயணம் கி. பி. 12-ம் நூற்றாண்டில் ஏற்பட்டது."

★★★★★★★★★★★

கல்லக்குடி அறப்போர்

★

இன்று

121-வது நாள்

★

கல்லக்குடி அறப்போர் தலைவர் மு. கருணாநிதி, மற்றும் பல தோழர்கள் சிறையில்

★

இன்று

120-வது நாள்

★★★★★★★★★★★

விஞ்ஞானிகள் பீதி!

மாஞ்செஸ்டர், நவ. 11—

மாஞ்செஸ்டர் சர்வகலாசாலைக்காக, நகருக்கு 25 மைல் தூரத்தில் நிர்மாணிக்கப்படும் 'ராக்ஷச டெலஸ்கோப்,' வேலை செய்யாது போய்விடுமோ என்று விஞ்ஞானிகள் சந்தேகிக்கின்றனர்.

கண்ணுக்குத் தெரியாத நட்சத்திரங்களிலிருந்து கிளம்பும் ஒலியை எல்லாம் இந்த டெலஸ்கோப், ரேடியோ அலைகளைக் கேட்கும்படி செய்யுமாம்.

மனித உழைப்புக்கு எதிராக மாபெரும் புரட்சி!

இயந்திர சகாப்தம் படுமென்று எச்சரிக்கை!

லண்டன், நவ. 11—

புள்ளி விவரங்கள், கணக்குகள் இவைகளைப் [illegible], நெருப்புப் பெட்டி [illegible] என்ன இயந்திரங்கள் [illegible] விரைவில் சர்வ சாதாரணமாக உபயோகிக்கப் படவிருக்கின்றன.

மிகவும் புரட்சிகரமான மாறுதல்கள் ஏற்படும் நிலை ஏற்பட்டு வருகிறது என்றும், ஆட்களுக்கு பதில் இயந்திரங்கள் வேலை செய்யும் சகாப்தம் இனி ஆரம்பமாகப் போகிறது என்றும் கூறப்படுகிறது. —ராய்ட்டர்.

மாஸ்கோவில் தொழிலாளர் திருநாள்

மாஸ்கோ, நவ. 7—

இங்குள்ள செஞ்சதுக்கத்தில் ஆண்டுதோறும் நடைபெறும் தொழிலாளர் விழாவை தலைமை அமைச்சர் மாலென்கோவ் முன்னின்று நடத்தி வைத்தார்.

இந்த மாபெரும் கூட்டத்தில் செஞ்சேனையினரும், சோவியத்தின் சாதாரண மக்களும் கலந்து கொண்டனர். நீண்ட பெரும் இராணுவ அணிவகுப்பு நடைபெற்றது. இரண்டு லட்சம் தொழிலாளர்கள் இந்த விழாவின்போது கலந்து கொண்டனர். லெனின், ஸ்டாலின் கல்லறையினடியில் மாலென்கோவ், மரியாதை செலுத்தினார். அவருகருகில் மாலெட்டோவும், மற்ற முக்கியஸ்தர்களும் இருந்தனர்.

பழத்தோட்டம் போடுகிறார் முன்னாள் மன்னர்!

லண்டன், நவ. 11—

முன்னாள் ருமேனியா மன்னர் மைக்கேல், அவரது மனைவி ஆன் இருவரும், இப்போது காய்கறித் தோட்டமும் பழத் தோட்டமும் போட்டு வருவதோடு, கோழிகளும் வளர்த்து வருகிறார்கள்.

ருமேனியாவில், இவர் மன்னராக இருந்தபோது ஒரு கோடி டவுன் [illegible] 160 கோட்டைகள் இவருக்கிருந்தன.

கடமை தவறிய இராணுவ அதிகாரிகள்

சிறை வாசம் முதல் பதவிக் குறைப்பு வரை தண்டனை

அம்மென், நவ 10—

அரபுகள் கிராமமான குபியாவை, யூதர்கள் தாக்கிய போது, கிராம மக்களுக்கு உதவி செய்யத் தவறிய ஜோர்தான் இராணுவ அதிகாரிகளுக்கு பல்வேறு விதமான தண்டனைகள் விதிக்கப்பட்டுள்ளன. சிறை வாசம் முதல் பதவிக் குறைப்பு முதலிய தண்டனைகள் விதிக்கப்பட்டுள்ளன.

யூதர்கள், அந்தக் கிராமத்தை ஏழு மணி நேரம் தாக்கி சூறையாடினதாகவும், உதவி வேண்டி செய்திகள் அனுப்பியும் இராணுவ அதிகாரிகள் வாளாக இருந்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டது. —ராய்ட்டர்.

மாஸ்கோ பயணம் ரத்து!

லண்டன், நவ 10—

மாஸ்கோவிற்குச் சென்று வர்த்தக அபிவிருத்தி விஷயமாக பேச்சு வார்த்தை நடத்த உத்தேசித்திருந்த பிரிட்டிஷ் வர்த்தகக் குழுவினர், தங்கள் பயணத்தை ரத்து செய்து விட்டனர். இவர்கள் மாஸ்கோ விஜயத்திற்கு ஏற்பாடு செய்த ஸ்தாபனம், கம்யூனிஸ்ட் தொடர்பு கொண்டுள்ளதென்று [illegible] எச்சரித்ததே இதற்குக் காரணம் எனத் தெரிகிறது. —ராய்ட்டர்.

அகதிகளின் பரிதாப வாழ்க்கை

பம்பாய், நவ 10—

பம்பாய்க்கு அருகில் அகதிகள் குடியேறிய உல்ஹாஸ் நகர், சோலிவாடா ஆகிய இரு இடங்களிலும் அகதிகளின் வாழ்க்கை பற்றி புள்ளி விபரங்கள் சேகரிக்கப்பட்டதில், 270 குடும்பங்களில், 111 குடும்பங்கள் சாதாரண வாழ்க்கை கூட நடத்த முடியாமல் கஷ்டப்படுவதாகத் தெரிந்தது.

"கிராமத்திற்குத் திரும்பிப் போ!"

படித்தவர்களை ரஷ்யா வற்புறுத்துகிறது

லண்டன், நவ 11—

கிராமங்களில் உற்பத்தி குறைந்து வருவதால் நகரத்தில் வசிக்கும் படித்த மக்களை, கிராமங்களில் போய் குடியேற வேண்டுமென்று ரஷ்ய சர்க்கார் வற்புறுத்தி வருகிறது.

கூட்டுப் பண்ணைகளில் நல்ல வேலை தருவதாகக் கூறி, படித்தவர்களுக்கு விசேஷ போனஸ், மற்ற வசதிகளையும் அளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இத்திட்டத்தின் கீழ் விஞ்ஞானிகள், தொழில் நுட்ப நிபுணர்கள், உபாத்தியாயர்கள், டாக்டர்கள் ஆகியோர் சிதறிக் கிடக்கும் கிராமங்களுக்கு அனுப்பப்படுகின்றனர்.

ஆனால் இளம் டாக்டர்கள், நகர சுகங்களை அனுபவித்த பிறகு, மூலை முடுக்குகளிலுள்ள கிராமங்களுக்குக் குடியேற மறுக்கின்றனர். இப்படிப்பட்டவர்களின் பெயர்கள், பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டு, கண்டிக்கப்படுகின்றனர்.

ரஷ்யாவிலிருக்கும் 3,50,000 விவசாய பட்டதாரிகளில், ஐந்து கூட்டுப் பண்ணைகளுக்கு ஒருவராக— அதாவது 5 சத வீதத்தினர்—விவசாயத்தில் ஈடுபட்டிருக்கின்றனர்; மீதி பேர், சர்க்கார் உத்தியோகங்களில் இருக்கின்றனர். —ராய்ட்டர்.

புதிய கல்வித் திட்ட நிபுணர் அறிக்கை

அமைச்சர் சுப்ரமணியம் அறிவிப்பு

சென்னை, நவ. 9—

டில்லியில் நடைபெறும் மத்திய கல்வி ஆய்வுக்குழு கூட்டத்திற்கு தாம் போகவில்லையென கல்வி அமைச்சர் சுப்ரமணியம் கூறினார்.

புதிய ஆரம்பக் கல்வித் திட்டத்தைப் பற்றி நிபுணர் கமிட்டியின் அறிக்கை இன்னும் சர்க்காருக்கு வந்து சேரவில்லை எனவும் டில்லியிலுள்ள ஒரு அரசாங்கத் தினர் கையெழுத்திடுவதற்காக அது அனுப்பப்பட்டிருப்பதாகவும் அவர் சொன்னார்.

'நிபுணர் கமிட்டி அறிக்கை சட்ட சபையில் சமர்ப்பிக்கப்படுமா?' என்ற கேள்விக்கு, சட்ட சபைக்கும் அதில் பங்குண்டென அமைச்சர் சொன்னார்.

சென்னை மாநிலத்தில் 'ஸனடோரியா'க்கள்

சென்னை நவ. 11—

சென்னை, க்ஷயரோக நிவாரண சங்கத்தின் மொத்தத் தொகையான ரூ 33,111-14-2ல், பின்கண்ட இடங்களில் 'ஸனடோரியா'க்களை ஏற்படுத்த அத்தொகைகளைப் பின்கண்டவாறு ஒதுக்கியுள்ளது :—

கடலூர் டி. பி. ஸனடோரியத்தில் குழந்தைகளுக்கான வார்டுக்கு ரூ 12,399—12—10;

சேலத்தில் கட்டப்படவிருக்கும் டி. பி. கிளினிக்குடன் சேர்ந்தாற்போல் குழந்தைகளுக்கான வார்டுக்கு ரூ 6663-4-2;

இராமநாதபுரம் தலைமைக் காரியாலய ஆஸ்பத்திரியில் 8 படுக்கைகளைக் கொண்ட டி. பி. வார்டுக்கு ரூ 6183-13-9;

மேற்குக் கோதாவரி ஜில்லாவில் டி. பி. ஸனடோரியம் ஏற்படுத்த ரூ. 7864—15—5

பருத்திக்கு ரேயனால் ஆபத்து!

வாஷிங்டன், நவ. 11—

"ரேயான் என்கிற செயற்கையாகத் தயாரிக்கப்படும் நூலால் பருத்திக்கே ஆபத்து வரலாம்," என்று, பருத்தி ஆலோசனைக் கமிட்டி எச்சரித்திருக்கிறது. ரேயானை ஏராளமாக உற்பத்தி செய்வதில் ஜப்பான் முனைந்து நிற்கிறது.

ஏஜண்டுகள் தேவை

★

கீழ்க்கண்ட இடங்களில் "நம் நாடு" விற்பனை செய்ய, முன்பணம் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை. நிபந்தனை விபரங்கட்கு எழுதவும். கீழ்க்கண்ட இடங்கட்கு "நம் நாடு" போய்க் கொண்டிருந்தது. பாக்கி ரூபாய் அனுப்பி வைக்காத காரணத்தினால், நிறுத்தப்பட்டவைகளாகும். இவர்கள் பாக்கி விபரங்களையும் வெளியிடுகிறோம். நம் தி. மு. கழக(கிளை)த் தோழர்கள், நம் மதிப்பிற்குரிய ஏஜண்டுத் தோழர்களைக் கண்டு, ரூபாய் அனுப்பி வைக்கும்படி செய்ய வேண்டுகிறோம். எழுதும் கடிதங்கட்கும் பதில்கூட எழுத முடியவில்லை, ஒரு சில ஏஜண்டுத் தோழர்கட்கு!

"'நம் நாடு' தி. மு. கழக ஏடு; அதைப் போற்றி வளர்ப்பது நம் கடமை," என்று, நம் பொதுச் செயலாளர் அண்ணா அவர்கள் கூறினார், சிறை செல்லும்போது! அதை மறந்தனர், நம் ஏஜண்டுத் தோழர்கள்! அவர்கட்கு மீண்டும் நினைவூட்டுகிறோம்.

- பேராவூரணி
- பாபநாசம் (தஞ்சை)
- ஸ்ரீவைகுண்டம்
- பழநி
- கோள்ளிடம்
- புவனகிரி
- மங்கநல்லூர்
- சிவகெங்கை
- தேனி
- ஆண்டிப்பட்டி
- சத்தியமங்கலம்
- கல்லக்குடி
- செங்கோட்டை
- வேம்படிதாளம்
- சங்கரன்கோவில்
- பாகநேரி
- சூலூர்

குறிப்பு :—சென்னை, உடுமலைப் பேட்டை, வால்பாறை ஏஜண்டுகள் வேறு நியமித்துள்ளோம். பாக்கித்தொகைமட்டும் வரவேண்டும்.

பொறுப்பாளர்,
"நம் நாடு," இராயபுரம்,
சென்னை—13.

மகாராஜாக்களைப்போல் பாவித்துக்கொள்ளும் ஐ. நா. அதிகாரிகள்

ஜாகர்தா, நவ. 11—

இங்குள்ள ஐ. நா. நிலையத்தைச் சேர்ந்த தலைவர்கள், மகாராஜாக்களைப்போல் நடந்து கொள்வதாக 'டைம்ஸ் ஆப் இந்தோனேஷியா' தன் தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

எந்த விருந்துக்கும் இவர்கள் அழைக்கப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறார்கள் என்றும், ஏதாவது ஒன்றுக்கு அழைக்காமலிருந்தால் கோபம் வந்து விடுகிறதென்றும் அப்பத்திரிகை எழுதியுள்ளது.

சொர்க்க சோளத்தால் வந்த வினை!

பரமக்குடி, நவ. 9—

நச்சு சத்துள்ள சொர்க்க சோளத்தை சாப்பிட்டதின் விளைவாக பரமக்குடி அருகே வேந்தோணி கிராமத்தில் ஒரு குடும்பத்திற்கு பைத்தியம்போல் ஏற்பட்டு பரமக்குடி மருத்துவ விடுதியில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, [illegible] நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்படுகிறது. ஆசிரியர் : [illegible]